பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 03 2025 7 15 செய்தி ஆசிரியர்
ஞாயிற்றுக்கிழமை இரவு ஜெ. காமராஜ்

வணக்கம், ஆகாஷவாணி

செய்திகள் - வாசிப்பவர் - லட்சுமி ராகவன்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் முன்னேற்றம் மற்றும் நிலையான வளர்ச்சியில் புதிய கண்டுபிடிப்புகள் தீர்வுகளை ஏற்படுத்தும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் உணவு வினியோகத்தை வலுப்படுத்துவதில் மத்திய கிடங்கு கழகம் முக்கியப் பங்கு வகிப்பதாக உணவு மற்றும் பொது வினியோகத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

3. சுற்றுலா, கல்வி, உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வளர்ச்சியில் விமான நிலையங்களின் மேம்பாடு முக்கிய பங்களிப்பை தந்து வருவதாக சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

4. உத்தராகண்டில் நேரிட்ட பனிச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 8ஆக உயர்ந்துள்ளது.

5. அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Madhvendra Shekhawat** தங்கப்பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

02 03 25 7 15 ஜக்தீப் தங்கர்-1

நாட்டின் முன்னேற்றம் மற்றும் நிலையான வளர்ச்சியில் புதிய கண்டுபிடிப்புகள் தீர்வுகளை ஏற்படுத்தும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் இன்று பங்கேற்று உரையாற்றினார்.

நமது மொழிகள் உலக அளவில் பல்வேறு பகுதிகளில் சிறப்புற்று விளங்குவதாக தெரிவித்தார்.

சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம், வங்கமொழி, ஹிந்தி உள்ளிட்ட சிறப்பான மொழிகளை நம் நாடு கொண்டிருப்பதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

நாடாளுமன்ற சிறப்புரைகள் தற்போது ஒரேநேரத்தில் 22 மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் கடந்த 3 ஆண்டுகளாக பிரதமரின் வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ் கோடிக்கணக்கான விவசாயிகளின் வங்கிக் கணக்கில் அரசின் நல உதவித் தொகை நேரடியாக செலுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

02 03 25 7 15 ஜக்தீப் தங்கர்-2

இதன் மூலமாக விவசாயிகளின் வாழ்க்கை மேம்பட்டிருப்பதாக குடியரசு துணைத்தலைவர் குறிப்பிட்டார்.

நாட்டின் முன்னேற்றத்தில் இளைய தலைமுறையினர் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

ஐ.ஐ.டி. மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் நாடாளுமன்றத்திற்கு வருகை தர வேண்டும் என்றும் திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டார்.

உதய் - ஹா ஏர்நெட் - 18

02 03 25 7 15 பிரல்ஹாத் ஜோஷி

நாட்டின் உணவு வினியோகத்தை வலுப்படுத்துவதிலும், உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும் மத்திய கிடங்கு கழகம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய உணவு மற்றும் பொது வினியோகத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள மத்திய கிடங்கு கழகத்தின் 69வது நிறுவன தின விழாவை ஒட்டி அவர் பகிர்ந்துள்ள காணொலி செய்தியில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நிதியாண்டில் 21 லட்சம் சதுர அடி பரப்பில் கூடுதலாக உணவுப் பொருளை சேமிப்பதற்கான நடவடிக்கைகளை அக்கழகம் மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் இலவச உணவு தானிய திட்டம் உள்ளிட்ட மத்திய அரசின் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதில் மத்திய கிடங்கு கழகம் முக்கிய பங்கு வகிப்பதாக அமைச்சர் கூறியுள்ளார்.

நாட்டின் உட்கட்டமைப்பு வளர்ச்சியில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாகவும், பொருளாதார வளர்ச்சியில் சேமிப்புக் கிடங்கு மற்றும் சரக்குப் போக்குவரத்துத் துறை முக்கிய அம்சங்களாக திகழ்வதாகவும் திரு. பிரல்ாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

உதய் - ஹா ஏர்நெட் - 14

02 03 25 7 15 ராம்மோகன் - ஏர்போர்ட்

சுற்றுலா, கல்வி, உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வளர்ச்சியில் விமான நிலையங்களின் மேம்பாடு முக்கிய பங்களிப்பை தந்து வருவதாக மத்திய விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் இன்று செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அவர், நாட்டின் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களில் உடான் திட்டம் மூலம் மத்திய அரசு விமான நிலையங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு விமான நிலையங்களை அமைப்பதிலும், மேம்படுத்துவதிலும் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

உதய் - ஹா ஏர்நெட் - 9

02 03 25 7 15 உத்தராகண்ட் - பனிச்சரிவு

உத்தராகண்டின்சமோலி மாவட்டம் மனா கிராமத்தில் நேரிட்ட பனிச்சரிவில் 8 பேர் உயிரிழந்தனர். இம்சம்பவத்தில் 46 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் நேரிட்ட இச்சம்பவத்தில் காணாமல் போன ஒருவரை தேடும் பணி இன்று நடைபெற்றது

மீட்புப் படையினர் அவரது சடலத்தை கண்டெடுத்த நிலையில் மீட்புப் பணிகள் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மீட்புப் பணியில் மத்திய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினருடன் ராணுவத்தினரும், இந்தோ — திபெத்திய எல்லைக் காவல் படையினரும் ஈடுபட்டனர்.

உதய் - ஹா ஏர்நெட் - 7

02 03 25 7 15 முதலமைச்சர் - வாழ்த்து

தமிழகத்தில் பொதுத்தேர்வுகளை மாணவர்கள் மன அமைதியுடனும், தன்னம்பிக்கையுடனும் எழுத வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் நாளை தொடங்க உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேபோல் 11ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் 5ஆம் தேதி தொடங்க உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

11 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளை தலா 8 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுத உள்ளதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

பதற்றமின்றி உற்சாகத்துடன் தேர்வுகளை எதிர்கொள்ள வேண்டும் என்றும், உயர்கல்வியின் வளர்ச்சிக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

கார். — ஹா செ.கு — 11

02 03 25 7 15 பஞ்சாப் - எண்கவுண்ட்டர்

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் அம்மாநில காவல்துறை மேற்கொண்ட எண்கவுண்ட்டரில் 2 ரவுடிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து 2 அதிநவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஜம்மு-கஷ்மீரில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரை கொலை செய்த வழக்கில் இவர்கள் இருவரும் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு கும்பலோடு தொடர்பில் இருந்ததாகவும் அம்மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

அம்மாநிலத்தின் ஃபெரோஸ்பூரில் போதைப்பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்த ஒருவரை கைது செய்துள்ளதாகவும், அவரிடமிருந்து 3 அதிநவீன ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

உதய் - ஹா ஏர்நெட் - 10

02 03 25 7 15 பாக். — ஆஃப்கன்

ஆஃப்கனிஸ்தான் அகதிகளை கட்டாயமாக நாடு கடத்தும் நடவடிக்கையை பாகிஸ்தான் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று மனித உரிமைகள் மற்றும் அகதிகள் மறுவாழ்வு அமைப்புகள் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்த கூட்டமைப்பு பாகிஸ்தான் அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில், சர்வதேச சட்டம் மற்றும் அகதிகள் பாதுகாப்பை மீறும் வகையில் இந்த நடவடிக்கை உள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இதுபற்றி ஊடகங்களுக்கு அந்த கூட்டமைப்பினர் அளித்த பேட்டி ஒன்றில் பெருமளவில் அகதிகள் கைது செய்யப்படுவது கண்டனத்திற்கு உரியது என்று தெரிவித்துள்ளனர்.

வரும் மார்ச் 31ஆம் தேதிக்குள் ஆஃப்கனிஸ்தான் அகதிகள் அனைவரும் பாகிஸ்தானை விட்டு வெளியேற வேண்டும் அல்லது அவர்களை வெளியேற்ற நேரிடும் என்று அந்நாடு எச்சரித்துள்ள நிலையில் அந்த கூட்டமைப்பு தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

உதய் - ஹா ஏர்நெட் - 12

02 03 25 7 15 அமித் ஷா – குஜராத்

குஜராத் மாநிலம் **Mehsana** மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, புதிதாக கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்களை இன்று திறந்து வைத்தார்.

ஒரு தனியார் அறக்கட்டளை மூலம் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தின் ஸ்மார்ட் வகுப்பறைகள், கணினி ஆய்வகங்களை அமைச்சர் பார்வையிட்டார்.

மேலும் பள்ளி மாணவர்களிடம் கற்றல் செயல்பாடுகள் குறித்து திரு. அமித் ஷா கேட்டறிந்தார்.

உதய் - ஹா ஏர்நெட் - 6

02 03 25 7 15 வானிலை

தென் மற்றும் வட தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்த அவர், அதிகபட்ச வெப்பநிலை அடுத்த 4 நாட்களுக்கு படிப்படியாக அதிகரிக்கக் கூடும் என்றும் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் - செந்தாமரைக்கண்ணன் - 40 நொடிகள்)

கார். – ஹா டெஸ்க் - 15

02 03 25 7 15 விளையாட்டுச் செய்திகள்-1

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Madhvendra Shekhawat** தங்கப்பதக்கம் வென்றார்.

**Arizona**-வில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 60 மீட்டர் தடை ஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

--------------

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் 250 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் நியூசிலாந்து அணி சற்றுமுன் வரை 11 புள்ளி 3 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 49 ரன் எடுத்துள்ளது.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற நியூசிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 249 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக ஷ்ரேயஸ் அய்யர் 79 ரன் எடுத்தார்.

**Matt Henry** 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

---------------

02 03 25 7 15 விளையாட்டுச் செய்திகள்-2

**Prague** செஸ் போட்டியின் நான்காவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா மற்றும் அரவிந்த் சிதம்பரம் முதலிடத்தில் உள்ளனர்.

செக் குடியரசில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 4வது சுற்றில் பிரக்ஞானந்தா, ஜெர்மனியின் **Vincent Keymer-**ஐ வென்றார்.

அரவிந்த் சிதம்பரம் மற்றும் அமெரிக்காவின் **Sam Shankland** இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

4வது சுற்று முடிவில் பிரக்ஞானந்தா மற்றும் அரவிந்த் சிதம்பரம் தலா 3 புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

--------------

**Gurugram** ஓபன் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Shruti Ahlawat** வெற்றி பெற்றார்.

-------------

**Billie Jean King** கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Vishal Uppal** தலைமையிலான இந்த அணியில் அங்கிதா ரெய்னா உட்பட 8 பேர் இடம்பெற்றுள்ளனர்.

ஆசியா ஓஷியானா குரூப்-1 சுற்றுக்கான இப்போட்டி புனேயில் ஏப்ரல் மாதம் 7ஆம் தேதி தொடங்குகிறது.

கார். – ஹா ஏர்நெட் - 23

02 03 25 7 15 வானிலை

நாட்டின் வடமேற்கு பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் அதிகபட்ச வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்து வரும் 4 நாட்களில் அது 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

நாட்டின் மத்திய பகுதியில் தற்போது நிலவி வரும் வெப்பநிலையில் பெரிய மாற்றங்கள் இல்லை என்றும் வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையே தென் மற்றும் வட தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உதய் - ஹா ஏர்நெட் -